வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 07.04.2025 திங்கட்கிழமை இதழ் : 98 பக்கங்கள் : 12

# ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையையும் இலங்கை இழக்கும் நிலைமை!

## ஹர்ஷ டி சில்வா எம். பி. எச்சரிக்கை



கொழும்பு, ஏப்ரல் 07

**அமெரிக்காவால் கதவுகள் அடைக்கப்படும்போது, ஐரோப்பிய ஒன்றியத்தின் கதவுகள் திறக்கப்படும் என்று எவராவது எண்ணினால் அது முற்றிலும் தவறாகும். ஐரோப்பிய பாராளுமன்றத்தால் கொண்டு வரப்படவுள்ள புதிய சட்டத்துடன் புதிய ஜி.எஸ்.பி.பிளஸ் வரவுள்ளது. அதற்கமைய தற்போது ஜி.எஸ்.பி. பிளஸ் கிடைக்கப் பெறும் சுமார் 6 நாடுகள் அதனை இழக்க நேரிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

எதிர்க்கட்சி தலைவர் பணிமனையில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

11



## இலங்கை பயணத்தை நிறைவு செய்தார் மோடி!

### நேற்று தமிழகம் சென்றார்

கொழும்பு, ஏப்ரல் 07

மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வருகை தந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று பிற்பகல் இந்தியாவுக்கு திரும்பினார்.

ஜனாதிபதியின் அழைப்பையேற்று இலங்கை வந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுடன் அநுராதபுரம் சிறீ மகாபோதியை சென்று தரிசித்ததுடன், பௌத்த தேரர்களிடம் ஆசீர்வாதமும் பெற்றார்.

இதன் பின்னர், ஜனாதிபதியும் இந்திய

11

இந்திய பரவலாக்கத்தை கடுமையாக எதிர்த்த குழுவொன்று இன்று இந்திய பிரதமருக்கு பிரமாண்ட வரவேற்பளித்து அவருக்கு இலங்கையில் வழங்கப்படும் அதியுயர் கௌரவ நாமத்தையும் வழங்கியிருக்கின்றமை உண்மையில் மகிழ்ச்சியளிக்கிறது. இலங்கைக்கு மிக அருகிலுள்ள பெரும் பொருளாதார சக்தி இந்தியாவாகும்.

தென்னிந்தியாவின் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலுங்கானா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்கள் அடுத்த தசாப்தத்தில் உலகில் மிக வேகமாக அபிவிருத்தியடையும் வலயமாக அமையும்.

11

## ஈழத் தமிழருக்கு தனிநாடு அமைந்திட செய்வார் மோடி!

### மதுரை ஆதீன குரு முதல்வர்

சென்னை, ஏப். 07

இந்திய பிரதமர் கச்சதீவை மீட்டு, இலங்கைத் தமிழர்களுக்கு தனி நாடு அமைந்திட ஆவன செய்வார் இவ்வாறு மதுரை ஆதீனம் ஹரிஹர ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

நேற்று தமிழகம் இராமேஸ்வரத்தில் பாம்பன் பாலத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். இதையொட்டி மதுரை ஆதீனம் வெளியிட்டுள்ள காணொலியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கை தமிழர்களின் நலன்களை கருத்தில்

11



## யாழில் சர்வதேச மைதானம் இந்தியாவின் ஆதரவு தேவை!

### மோடியிடம் கோரினார் ஜெயசூரியா

கொழும்பு, ஏப். 07

யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கு இந்தியாவின் ஆதரவு தேவை என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் சனத் ஜெயசூரியா கோரிக்கை முன்வைத்துள்ளார்.

1996 கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியினர் நேற்று முன்தினம் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தனர். இதன்போதே, இந்திய பிரதமரிடம் கிரிக்கெட் ஜாம்பவான் சனத் ஜெயசூரியா ஆதரவை கோரினார். அத்துடன்,

11

## புதிய வரிகள் தொடர்பில் அமெரிக்காவுடன் பேச்சு!

### பிரதி நிதி அமைச்சர் ஹர்ஷன

கொழும்பு, ஏப். 07

அமெரிக்கா விதித்த புதிய வரி தொடர்பில் ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவுக்கும் அமெரிக்க வர்த்தக பிரதிநிதி பணிமனை அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு இந்த வாரம் நடைபெறவுள்ளது என்று நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரி யப்பெரும தெரிவித்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் புதிய வரி அறிவிப்பை

11

## ஒற்றையாட்சிக்குள் தீர்வு சாத்தியமே இல்லை!

### இந்திய பிரதமரிடம் கூறினோம் என்கிறார் கஜேந்திரகுமார் எம்.பி.!



கொழும்பு, ஏப். 07

"ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வோ, தீர்வோ சரிவராது என்ற நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எடுத்துரைத்தோம்." - என்று இந்திய பிரதமரை சந்தித்த பின்னர் தமிழ்த் தேசிய மக்கள்

11

## உயிர்த்த ஞாயிறை முன்னிட்டு தேவாலயங்களுக்கு பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 07

உயிர்த்த ஞாயிறு தினம் எதிர்வரும் 20ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இதையொட்டி நாட்டிலுள்ள அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களுக்கும் விசேட பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், கர்தினால் பேராயர் மல்கம்

11

## அரச தரப்பின் இளம் எம்.பி. திடீர் மறைவு



கொழும்பு, ஏப். 07

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் கோசல நுவான் (வயது 38) நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அரச தரப்பின் கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான கோசல நுவான் மாரடைப்பு காரணமாக கரவனெல்லை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஐ)

## தாயார் திடீர் உயிரிழப்பு; சந்தேகத்தில் மகன் கைது

மட்டக்களப்பு, ஏப். 07

வாழைச்சேனையில் 65 வயது தாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். மனநலம் பாதிக்கப்பட்ட மகனின் தாக்குதலில் அவர் உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

நாவலடி - கேணியடியை சேர்ந்த யாசகம் பெற்று வாழ்ந்து வரும் தாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பில் 46

11

## போதை மாத்திரைகளுடன் யாழ். நகரில் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 07

யாழ்ப்பாணம் நகரில் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார் என்று யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நகரில் போதை மாத்திரைகளின் பரவல் அதிகரித்துள்ளது - விற்பனை செய்யப்படுகிறது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது இடம்பெற்றது.


11






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இந்திய பிரதமர் பங்கேற்ற நிகழ்வுகளின் பதிவுகள்

மூன்றுநாள் உத்தியோகபூர்வமாக இலங்கை வந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்ற நிகழ்வுகளின் படங்கள் இவை...

அநுராதபுரம் மகா போதியில் வழிபட்டவேளை...

அநுராதபுரம் மாஹோ – ஓமந்தை ரயில் பாதை சமிக்ஞை கட்டமைப்பை திறந்து வைத்தபோது...




அநுராதபுரத்தில் ஜனாதிபதி அநுரவுடன் பயணித்த சமயம்...!




இலங்கையில் உயிரிழந்த இந்திய அமைதி படையினருக்கு அஞ்சலி செலுத்திய தருணம்...





நாட்டிலிருந்து விடைபெற்றவேளை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
07.04.2025 திங்கட்கிழமை
பிலவ வருடம், பங்குனி 24

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மோடியுடனான சந்திப்பு

இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவு செய்யப்பட்ட தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்திருந்தார். இதேபோன்று தெரிவு செய்யப்பட்ட மலையக கட்சிகளின் தலைவர்களையும் அவர் சந்தித்திருந்தார். வடக்கு, கிழக்கிலிருந்து சந்தித்த கட்சிகளின் பிரதிநிதிகள் போன்று மலையக கட்சிகளின் தலைவர்கள் முட்டி மோதிக்கொண்டு ஊடகங்களில் கருத்துத் தெரிவிக்கவில்லை. நாங்கள் சந்தித்தோம் என்பதுடன் நிறுத்திக் கொண்டனர். ஏனெனில், அவர்கள் கட்சிகளாகப் பிரிந்திருந்தாலும்கூட இந்தியத் தலைவரை சந்திப்பதில் அவர்களுக்குள் பதற்றம் இல்லை.

ஆனால், தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போரின் பிரச்னையோ வேறு. அதாவது, தங்களில் யார் விடயங்களை சரியாக வலியுறுத்தினோம் என்பதில் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையே போட்டி உண்டு. அந்தப் போட்டியின் விளைவாகவே தனியான ஊடக சந்திப்புகள் நடக்கின்றன. உண்மையில், என்ன செய்திருக்க வேண்டும் - சந்திப்பில் பங்குகொண்ட அனைத்து பிரதிநிதிகளும் இணைந்து ஓர் ஊடக சந்திப்பை நடத்தியிருக்க வேண்டும். ஆனால், முடியவில்லை.

அடிப்படையில் இது ஒரு குறியீட்டு ரீதியான பெறுமதி கொண்ட சந்திப்பாகும். இலங்கையின் வடக்கு, கிழக்கை வரலாற்று வாழ்விடமாகக் கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்களின் அபிலாசைகள், இதேபோன்று இந்திய வம்சாவளி மக்களான மலையக மக்களின் பிரச்னைகள் தொடர்பில் இந்தியா தொடர்ந்தும் அதன் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறது என்பதே இந்தச் சந்திப்பின் மூலம் இந்தியா அரசாங்கத்துக்கு உணர்த்த முற்படும் செய்தியாகும்.

இந்திய பிரதமரிடம் தாங்கள் என்ன பேசினோம் என்பதைப் பற்றி இலங்கை தமிழ் அரசு கட்சியின் சார்பில் பங்குகொண்டவர்கள் உடனடியாக ஊடகங்களுக்குத் தெரிவித்தனர். அதிலும் சந்திப்பில் பங்குகொண்ட தமிழ் அரசு கட்சியின் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஊடக சந்திப்பில் பங்குகொள்ளவில்லை. இதனைத் தொடர்ந்து ஒற்றையாட்சிக்குள் தீர்வின் சாத்தியமின்மையை தான் வலியுறுத்தினார் என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணி) கட்சியின் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

சந்திப்பில் பங்குகொண்டவர்களில் அவர் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்னையை உறுதியாக இந்தியப் பிரதமரிடம் தெரிவித்தாரென அவரது ஆதரவாளர்கள் கொண்டாடுவதை காண முடிகிறது. ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியிலிருந்து பங்கொண்டவர்கள் தாங்கள் பேசியதைக் கூறவில்லை.

சந்திப்பில் பங்குகொண்ட தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்துவரும் கருத்துகள் எதனைக் காண்பிக்கின்றது? இந்தியப் பிரதமரை சந்திக்கும்போதும் தெருக்களில் சண்டையிடும் கட்சி மனோபாவத்துடன்தான் சந்தித்திருக்கின்றனர் - இதுதான் தமிழ் கட்சிகளின் நிலைமை என்றால், இவ்வாறான கட்சிகளை நம்பி ஒரு பிராந்திய சக்தி எவ்வாறு அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்க முடியும்?

தாங்கள் பிரதமரிடம் குறிப்பிட்டதை மக்களுக்குக் கூறிவரும் தமிழ் பிரதிநிதிகள் தங்களின் கருத்துகளுக்கு பிரதமர் மோடி வழங்கிய பதிலை எங்குமே கூறவில்லை. உண்மையில், அவர் என்ன பதிலளித்தார். தமிழ் மக்களின் பிரச்னைக்கு சமஷ்டி தீர்வு மிகவும் சிறந்தது. அதனை தனது அரசாங்கம் நிச்சயம் கொழும்பிடம் வலியுறுத்துமென்று கூறினாரா? மீனவர் பிரச்னைக்கான நிரந்தரத் தீர்வு தொடர்பில் அவர் என்ன கூறினார்?

ஏனெனில், தங்களில் யார் சரியாகப் பேசினார்கள் என்பதில் முட்டி மோதிக் கொள்ளும் கட்சிகளின் தலைவர்கள் பிரதமர் மோடி தங்களுக்கு என்ன சொன்னார் என்பதையுமல்லவா மக்களுக்குச் சொல்ல வேண்டும். புதுடில்லிக்கு அழைக்குமாறு கோரியதாகவும் ஒரு கட்சியின் பிரதிநிதி கூறுகிறார் - அவ்வாறாயின் அதற்கு மோடி வழங்கிய பதில் என்ன? இந்திய பிரதமரின் கரிசனை என்ன என்பதையும் தமிழ் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா?

# யாழில் பண மோசடியில் ஈடுபட்ட நபர் 17ஆம் திகதி வரை மறியலில்

யாழ்ப்பாணம், ஏப். 07

யாழ்ப்பாணத்தில் ஒரு கோடியே அறுபது இலட்சம் ரூபாய் பண மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவர் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் வெளிநாடு செல்வதற்காக வட்டுக்கோட்டையை சேர்ந்த ஒருவரிடம் ஒரு கோடியே அறுபது இலட்சம் ரூபாய் பணத்தை கொடுத்துள்ளார்.

இந்த நிலையில், அந்த பணத்தை வாங்கிய நபர் அவரை வெளிநாட்டுக்கு அனுப்பாமல், அந்த பணத்தைத் திருப்பி கொடுக்காமல் மோசடி செய்துள்ளார்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட நபர் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தார். இதனையடுத்து குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப் பதிகாரி எம். உதயானந்தன் தலைமையிலான குழுவினர் சந்தேகநபரை கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் கடந்த 4 ஆம் திகதி முற்படுத்தினர்.

இந்த நிலையில், சந்தேகநபரை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(எ-05)

# அபிவிருத்தி திட்டங்கள் பற்றி யாழ்ப்பாணத்தில் மீளாய்வு

யாழ்ப்பாணம், ஏப். 07

கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டம் மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் கடந்த 4 ஆம் திகதி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைமையுரையாற்றிய பதில் அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் மாவட்ட கிராமிய வீதி அபிவிருத்திக்கு 1000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண பிரதம செயலாளரால் அறிவிக்கப்பட்டுள் ளதாகவும், கடந்த மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வீதிகள் தொடர்பான உப குழுக் கூட்டத்தை ஒழுங்குபடுத்துமாறு எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, வீதி அபிவிருத்தியுடன் தொடர்புடைய திணைக்களங்களையும் உள்ளடக்கிய இவ் உப குழுவில் பிரதேச செயலக ரீதியாக முன்னுரிமை அடிப்படையில் வீதிகளைத் தெரிவு செய்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு சமர்ப்பிப்பதே இந்தக் கூட்டத்தின் நோக்கம் எனவும் கூறினார்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்ட சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு 09 செயல் திட்டங்களுக்கு 131.02 மில்லியன் ரூபாய் ஒதுக்கிடப்பட்டுள்ளது எனவும் இதனை நீடித்து நிலைக்கும் வகையில் தொடர்புடைய பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் இணைந்து மிகவும் சரியான முறையில் நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

மேலும், பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்துக்கு 56.00 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டதில் அனுமதிக்கப்பட்ட திட்டங்களை கடந்த ஆண்டு போன்று குறிப்பிடப்பட்ட காலத்தில் நிறைவேற்றி முடிக்க அனைவரின் ஒத்துழைப்பையும் நல்குமாறும் பதில் அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார்.

மேலும், இந்தக் கூட்டத்தில் கிராமிய அபிவிருத்தித் திட்டம், வீட்டுத் திட்டம், சமுர்த்தி வலுப்படுத்தல் வேலைத் திட்டம், நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் வீட்டுத்திட்டம் போன்ற திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாகவும் பதில் அரசாங்க அதிபர் தலைமையில் ஆராயப்பட்டு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

(எ-05)

## வலைப்பந்தாட்ட பிறீமியர் லீக் போட்டிக்கான மாபெரும் ஏலம்


வவுனியா, ஏப். 07

வவுனியா மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் நடத்தவுள்ள வவுனியா வலைப்பந்தாட்ட பிறீமியர் லீக் சுற்றுப்போட்டிக்கான வீரர்களை தெரிவு செய்யும் ஏலம் வவுனியா சைவப் பிரகாசா மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சுமார் 100 வீரர்கள் பங்குபற்றிய இந்த ஏல நிகழ்வில் போட்டியிடவுள்ள 5 அணிகளுக்குமாக ஓர் அணியில் 12 பேர் வீதம் 60 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஓர் அணியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 8 வீரர்களும் ஏனைய 4 வீரர்களும் வடக்கு மாகாணத்தை சேர்ந்த வெளி மாவட்ட வீரர்களும் உள்ளடங்குகின்றனர்.

(எ-10)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப் பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**இடபம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். அதிகார பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மனக் குழப்பம் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் எளிதில் முடியும். நண்பர்களால் ஆதாயம் உண்டு.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்திற்கு ஆளாவீர்கள்.

**சிம்மம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர், நண்பர்களுடன் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். வாகனம் தொந்தரவு தரும். அரசு காரியங்கள் தாமதமாக முடியும்.

**கன்னி**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். மதிப்புக் கூடும் நாள்.

**துலாம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். தடைபட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். ஆடை ஆபரணம் சேரும்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்து கொள்ள வில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

**மகரம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக செயல்படுவார்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதக மாக முடியும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீடு களைகட்டும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டி கொடுத்து வேலை வாங்குவீர்கள்.

**மீனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்று வீர்கள். உறவினர்களின் அன்புதொல்லை குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

# தேங்காய் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி!

## வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதில் அரசு அசமந்தம் - ஐங்கரநேசன் சாடல்

யாழ்ப்பாணம், ஏப். 07

இலங்கையில் இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் தேங்காய் உற்பத்தி 32.3 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. எதிர்வரும் மாதங்களில் மேலும் குறை வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேங்காய் உற்பத்தியில் பெரும் சரிவை ஏற்படுத்தி வரும் பிரதான காரணிகளில் தென்னை மரங்களில் பரவி வருகின்ற வெள்ளை ஈக்களின் தாக்கமும் ஒன்றாகவுள்ளது. ஆனால், வெள்ளை ஈக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இதுவரையில் அரசாங்கம் போதிய நடவடிக்கைகளை எடுக்காமல் அசமந்தமாகவுள்ளது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக் காட்டியுள்ளார்.

தென்னை மரங்களில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வெள்ளை ஈக்களின் தாக்கம் தேங்காய் உற்பத்தியைப் பாதித்து வருவது தொடர்பில் அவர் நேற்று விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார். பெருமெடுப்பில் கிளீன் சிறீலங்கா திட்டத்தை முன்னெடுத்து வரும் அரசாங்கம் குப்பை கூழங்களையும் சுவரொட்டிகளையும் அகற்றுவதோடு நிற்காமல் வெள்ளை ஈக்களை அகற்றித் தென்னையைச் சுத்தம் செய்வதையும் அத்திட்டத்தில் உள்வாங்க வேண்டும். விரைந்து செயல்படாவிடின் வீட்டினதும் நாட்டினதும் தெங்குப் பொருளாதாரம் மென் மேலும் வீழ்ச்சியடையும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-05)


# தொழில் முயற்சிகளிலும் ஆர்வம் காட்ட வேண்டும்

## யாழ். பல்கலை. மாணவர்களுக்கு அறிவுரை

யாழ்ப்பாணம், ஏப். 06

பட்டதாரிகள் தனியே அரசாங்க வேலைகளில் மட்டும் தங்கியிருக்காமல் தனியார்த் துறைகளிலும் தொழில் முயற்சிகளிலும் ஆர்வம் காட்ட வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறையைச் சேர்ந்த இரண்டாம் வருட மாணவர்கள் நேற்று முன்தினம் காலை யாழ். மாவட்ட செயலகத்துக்கு சென்று பதில் அரச அதிபருடன் விசேட சந்திப்பில் ஈடுபட்டனர். யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் மாணவர்கள் மாவட்ட செயலகத்துக்கு சென்றனர்.



இதன்போது, பதில் அரசாங்க அதிபர் பிரதீபனை சந்தித்தனர். மாணவர்களை வரவேற்று உரையாற்றிய பதில் அரச அதிபர், மாவட்ட மற்றும் பிரதேச செயலக நிர்வாகக் கட்டமைப்புகள், இலங்கை நிர்வாக சேவைகள் மற்றும் ஏனைய பதவிகளின் விவரங்கள், சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுவரும் கொடுப்பனவுகள், சமுர்த்தி வேலைத்திட்டம் மற்றும் மீளக்குடியமர்வு செயல்பாடுகள் தொடர்பில் மாணவர்களுக்கு விளக்கமளித்தார். அத்தோடு, பட்டம் பெற்றவுடன் தனியே அரசாங்க வேலைகளில் மட்டும் தங்கியிருக்காமல் அல்லது அதனை மட்டும் எதிர்பார்த்திருக்காமல் தனியார்த் துறைகளிலும் தொழில் முயற்சிகளிலும் ஆர்வம் காட்ட வேண்டும்- என்றார். (எ- 05)

# பருத்தித்துறை பொதுச்சந்தை புதிய இடத்துக்கு மாற்றம்

## வியாபாரிகளின் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 07

பருத்தித்துறை நகரில் இதுவரை காலமும் இயங்கி வந்த மரக்கறிச் சந்தையை முதலாம் குறுக்குத்தெருவில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்துக்கு மாற்றுவதற்காக முன்னறிவித்தல் வழங்கி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய சந்தை கட்டடத்தில் மரக்கறி வியாபாரத்தை மேற்கொள்ளுமாறு சில மாதங்களுக்கு முன்னர் பருத்தித்துறை நகர சபையால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதனை எதிர்த்து மரக்கறி வர்த்தகர்களால் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் ஏற்கனவே பழைய பொதுச்சந்தையை குழப்ப வேண்டாமென பருத்தித்துறை நீதிமன்றம் இடைக் காலத் தடை விதித்திருந்தது. இத்தடை பை கடந்த 17 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றம் நீக்கியிருந்தது.

இதனையடுத்து பருத்தித்துறைநகர சபை, புதிய பொதுச் சந்தையை திறப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்து கடந்த 3 ஆம் திகதி வியாழக்கிழமை வியாபாரத்தை மேற்கொள்ள அனுமதித்தனர்.

இருப்பினும், மரக்கறி வியாபாரிகள் தொடுத்த வழக்கில் தெரிவிக்கப்பட்ட சில அம்சங்கள் தொடர்பான கலந்துரையாடலுக்காக அவ்வழக்கு எதிர்வரும் ஜூன் 20 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

புதிய பொதுச்சந்தையின் செயல்பாடுகள் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டபோது ஒருசில மரக்கறி வியாபாரிகள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.இருப்பினும், கடந்த வெள்ளிக்கிழமை வியாபாரிகள் பகிஷ்கரிப்பை கைவிட்டு புதிய சந்தையில் மரக்கறி வியாபாரத்தை மேற்கொண்டனர்.

இந்த விடயம் தொடர்பில் பருத்தித்துறை நகர சபை செயலாளர் திருமதி தாரணி கஜரூபன் கூறுகையில், "பருத்தித்துறை நீதிமன்றில் வியாபாரிகளால் தொடுக்கப்பட்ட வழக்கில் இடமாற்றத்துக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கடந்த தவணையின் போது அந்த இடைக்காலத் தடை உத்தரவு நீதிமன்றால் நீக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது . இதனையடுத்து, பருத்தித்துறை நகர சபையினர் உள்ளூராட்சி மன்றங்களுக்கான சட்ட திட்டங்களுக்கமைய இந்த புதிய சந்தைக்கு வியாபார நடவ டிக்கையை மாற்றம் செய்வ தென தீர்மானிக்கப்பட்டு இட மாற்ற அறிவித்தல் வழங்கப் பட்டு நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது"- என்றார். (எ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் பாராளுமன்றில் கேள்வி எழுப்புவோம்!

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 07

பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின் போது இந்தியாவுடன் அரசாங்கம் கையெழுத்திட்ட ஒப்பந்தங்கள் குறித்து செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்ப திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷா டி சில்வா நேற்றைய தினம் தெரிவித்தார்.



"நாங்கள் இந்த ஒப்பந்தங்களுக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால், பிரச்னை என்னவென்றால், இந்த ஒப்பந்தங்கள் குறித்து எங்களிடம் எந்த தகவலும் இல்லை. குறிப்பாக பாதுகாப்பு ஒப்பந்தத்தில் என்ன சேர்க்கப்பட்டுள்ளது என்பது எங்களுக்குத் தெரியாது. இந்த நாட்டு மக்களுக்கு இந்த ஒப்பந்தங்களைப் பற்றி அறிய உரிமை இருப்பதால், நாங்கள் அவற்றைப் பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி கேட்போம்," என்று அவர் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

"இந்திய விரிவாக்கம் பற்றி கூச்சலிட்டு வரும் ஒரு கட்சி, மோடியை வரவேற்று அவருக்கு மிக உயர்ந்த மரியாதை அளிப்பதை காண்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பொருளாதார ரீதியாக சக்தி வாய்ந்த நாடாகத் திகழும் இந்தியாவுடன் இலங்கை இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதால் இதைச் செய்ய வேண்டும்," என்றும் அவர் கூறினார். (ஐ)

# வாகன விபத்துகளில் சிறுமி உட்பட மூவர் பலி!

கொழும்பு, ஏப். 07

நாட்டில் பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்துகளில் 5 வயது சிறுமி உட்பட மூவர் உயிரிழந்தனர்.

கம்பஹா - ராகம - மஹாபாகே - வெலிசர பகுதியில் வீட்டின் முன் விளையாடிய 3 சிறுவர்களை கார் மோதியது. இதில், படுகாயமடைந்த மூவரும் ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் வெலிசரவை சேர்ந்த 5 வயது சிறுமியாவார். கார் சாரதி சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இதேவேளை, கண்டி - பதியதலாவ வீதியில் வீதியைக் கடக்க முற்பட்ட பெண் பாதசாரியை கார் மோதியதில் அவர் படுகாயமடைந்தார். பேராதனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார் இந்த சம்பவத்தில் 76 வயது மூதாட்டியே உயிரிழந்தார்.

இதேபோன்று, தம்புள்ளை - குருநாகல் வீதியில் கொஸ்கெலே பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 76 வயது நபர் உயிரிழந்தார். (ஐ)

# 600 சட்டவிரோத மதுபான போத்தல்கள் சிக்கின!

கண்டி, ஏப். 07

மலை உச்சியிலுள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்ட 600 சட்டவிரோத மதுபான போத்தல்களை கைப்பற்றியுள்ளனர். அத்து டன், 5 சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளனர்.



கண்டி - வத்துகாமம்- அடலஹாகொட பிரதேசத்தில் இந்த சட்டவிரோத மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன், இந்த சட்டவிரோத மதுபானத்தை உற்பத்தி செய்த சந்தேகநபர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதான பிரதான சந்தேக நபர் இதற்கு முன்னரும் இவ்வாறான பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு தண்டனை பெற்றவர் என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஏலக்காயுடன் இருவர் கைது!

கொழும்பு, ஏப். 07

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் 117 கிலோ ஏலக்காயுடன் கொழும்பை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் சுங்க வரிகளைத் தவிர்த்து ஏலக்காயை கடத்திய குற்றச்சாட்டிலேயே கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். கைதான இருவரும் 41, 49 வயதுடையவர்களாவர். (ஐ)

# விழா நடந்துகொண்டிந்தபோதே தீப்பிடித்து எரிந்தது அரங்கம்!

கொழும்பு, ஏப். 07

விழா நடந்து கொண்டிருந்த அரங்கில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. எனினும், அங்கிருந்தவர்கள் எவருக்கும் அதிர்ஷ்டவசமாக எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிய வருகின்றது.

கொழும்பு - இராஜகிரியவில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தீ விபத்தையடுத்து அங்கிருந்தவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். கோட்டை மாநகர சபையின் 5 தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டன. இதையடுத்து, தீ பரவல் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரிய வரவில்லை. (ஐ)

# தபால் ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து

கொழும்பு, ஏப். 07

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடையும் வரை அனைத்து தபால் ஊழியர்களின் விடுமுறைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்காக உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகளுக்காகவே தபால் ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# ஜனஸாக்கள் கட்டாய தகனம்; நேற்று விசேட பிரார்த்தனை!



கொழும்பு, ஏப். 07

கோவிட் -19 வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனஸாக்கள் (உடல்கள்) கட்டாய தகனம் செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு தெரிவித்து பிரார்த்தனை ஒன்று நடைபெற்றது.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வை இலங்கை முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவும் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, கருத்து வெளியிட்ட சஜித் பிரேமதாஸ,

ஜனாஸா எரிப்பு விவகாரத்தில் சில அரசியல் தலைவர்கள் அன்று முஸ்லிம்களின் உரிமைகளுக்காக முன்நிற்கவில்லை. ஆனால்,

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் இந்த உரிமைக்காக தொடர்ந்தும் குரல் எழுப்பி வந்தது.

அடிப்படை மனித உரிமைகளையும், மத உரிமைகளையும் மீறி பலவந்தமாக எரிக்கப்பட்ட முஸ்லிம் ஜனாஸாக்கள் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஆறாத வடுக்களை விட்டுச் சென்றுள்ளன - என்று சஜித் பிரேமதாஸ தனது உரையில் குறிப்பிட்டார். (ஐ)

## போதைப்பொருட்களுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 07

ஐஸ், ஹஷிஷ், கொக்கைன் மற்றும் போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காலி - ஹபராதுவ பகுதியில் நேற்று முன்தினம் இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் 27 வயது நபராவார். அவரிடமிருந்து, 80 கிராம் ஐஸ் போதைப் பொருள், 4 கிராம் கொக்கைன் போதைப் பொருள், 30 கிராம் ஹஷிஷ் போதைப்பொருள் மற்றும் 65 போதை மாத்திரைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ஐ)

# கஞ்சா செடி, துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 07

கஞ்சா செடிகள், கோடா மற்றும் உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை - கலேவெல பொலிஸ் பிரிவிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கலேவெல பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவிற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேக நபரிடம் இருந்து, 7 கஞ்சா செடிகள், 181 லீற்றர் கோடா மற்றும் உள்நாட்டுத் துப்பாக்கி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

# அரச அதிகாரிகளை அடுத்த வாரம் சந்திக்கிறது தேர்தல்கள் ஆணைக்குழு!

கொழும்பு, ஏப். 07

அரச சொத்துகளை தவறாகப் பயன்படுத்துவது குறித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை செயல்படுத்துவது தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி திட்டம் அடுத்த வாரம் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அனைத்து அரச நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டத்துக்காக குறித்த அரச அதிகாரிகள் அடுத்த வாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி வேறுபாடுகளை கடந்து சகலரும் ஒன்றுபட வேண்டும்!

## நாமல் ராஜபக்ஷ அழைப்பு



கொழும்பு, ஏப். 07

**இலங்கை பொருட்களுக்கு 44 சதவீத வரி விதிக்க அமெரிக்கா எடுத்த முடிவைத் தொடர்ந்து இலங்கை பொருளாதாரம் சவால்களை எதிர்கொண்டுள்ளது. இந்நிலையில், அனைத்து அரசியல் கட்சிகளும் வேறுபாடுகளை பொருட்படுத்தாமல் ஒன்றுபட வேண்டும் என்று இலங்கை பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு,

இந்த வரிகள் தைத்த ஆடைகள் துறை போன்ற முக்கிய துறைகளை கடுமையாக பாதிக்கும். வேலையின்மை அதிகரிக்க வழிவகுக்கும்.

2022 பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை இன்னும் மீண்டு வருவதால், அரசாங்கத்தின் ஏற்றுமதி இலக்குகள் இப் போது ஆபத்தில் உள்ளன. இதனால் பொருளாதார மீட்சி இன்னும் கடினமாகிறது.

மேலும், அமெரிக்காவுடனான பேச்சு வெற்றி பெறவில்லை என்றால், அரசாங்கம் வரவு - செலவு திட்டத்தை திருத்தி, ஏற்றுமதி வருவாயை பராமரிக்க மாற்றுத் தீர்வுகளைத் தேட வேண்டும். இந்த மிகப்பெரிய தடையை நாம் எதிர்கொள்ளும் வேளையில், அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து பாதிக்கப்பட்ட துறைகளை ஆதரிக்க வேண்டிய நேரம் இது. இந் நிலையில், இந்த சவாலை சமாளிக்க ஒற்றுமையின் அவசியத்தையும் நாமல் எம். பி. இதன் போது வலியுறுத்தினார். (ஐ)

# சக்தி வாய்ந்த கடவுச்சீட்டு இலங்கைக்கு 168ஆவது இடம்!

## முதலிடம் பிடித்தது அயர்லாந்து

நியூயோர்க், ஏப். 07

2025ஆம் ஆண்டில் உலகின் மிக சக்திவாய்ந்த கடவுச்சீட்டு என்ற அந்தஸ்தை அயர்லாந்து தனி ஒரு நாடாக வென்றுள்ளது.

இதேவேளை, இந்தப் பட்டியலில் இலங்கை 168ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

நோமட் கடவுச்சீட்டு சுட்டெண் வெளியிட்ட பட்டியலிலேயே இந்த விவரம் வெளியானது.

இந்தப் பட்டியலில் சுவிற்சர்லாந்து இரண்டாவது இடத்திலும் கிரீஸ் மூன்றாவது இடத்திலும் உள்ளன. போர்த்துக்கல், மோல்டா, இத்தாலி, லக்சம்பேர்க், பின்லாந்து, நார்வே மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவை முதல் 10 இடங்களில் உள்ளன. இந்தப் பட்டியலில் முதல் ஒன்பது இடங்களையும் ஐரோப்பிய நாடுகள் பிடித்துள்ளன.

வீசா இல்லாத பயணம், வரிவிதிப்பு, நாட்டின் உலகளாவிய பிம்பம், இரட்டை குடியுரிமைக்கான சாத்தியம் மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் ஆகியவை உலகின் சிறந்த கடவுச்சீட்டுக்கான அளவுகோலாகக் கருதப்படுகிறது.

அயர்லாந்து 109 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளது.

199 நாடுகள் கொண்ட இந்தப் பட்டியலில் இலங்கை 43.5 புள்ளிகளுடன் 168ஆவது இடத்தில் உள்ளது.

எவ்வாறாயி னும் இந்தப் பட்டியலில் அமெரிக்கா 45வது இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மோடியின் வருகை நாட்டுக்கு சாதகம்!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஏப். 07

நமது நாடு ஆபத்தில் சிக்கியிருந்தபோது இந்தியாவை போலவே பிரதமர் மோடியும் எங்களுக்கு பல உதவிகளை செய்தார். எனவே, நாட்டுக்கு மதிப்பு சேர்க்கும், பயன்கிட்டும் - மக்களுக்கு சேவை கிட்டும் விதமாக அமையும் வெற்றிகரமான பயணமாக இது கருதப்படுகிறது.


இந்தப் பயணம் நாட் டுக்கு சாதகமாக அமையும் என நம்புகிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொலன்னாவையில் வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்னைகளை ஆராயும் நோக்கில் நேற்று முன்தினம் இரவு அவர் அங்கு சென்ற போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்த ஆண்டு தேர்தல் ஊடாக மக்கள் கருத்தை மக்களிடம் இருந்தே மிகத் தெளிவாக தெரிந்து கொள்ளலாம். மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா அல்லது துக்கமாக இருக்கிறார்களா என்பதை ஆராய்ந்து பாருங்கள். நாட்டின் பயண பாதை குறித்தும் எதிர் காலம் குறித்து மக்களிடம் கேள்வி எழுப்பிப் பாருங்கள். மக்கள் விரக்தியில் உள்ளனர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இந்த வெள்ளத்துக்கு நிலையான தீர்வை மரிக்காரே பெற்றுத் தந்தார். ஐக்கிய மக்கள் சக்திக்கு அதிகாரம் கிடைத்திருந்தால் இதனைவிடவும் பல தீர்வுகளைப் பெற்றுத் தந்திருப்போம் - எனறும் கூறினார். (ஐ)

# 863 கிலோ போதைப்பொருட்களுடன் 7 சந்தேகநபர்கள் கடற்படையால் கைது!



கொழும்பு, ஏப். 07

கடற்படையினரால் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது, மீன்பிடி கப்பலில் இருந்து 671 கிலோ 452 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 191 கிலோ 752 கிராம் ஹெரோயினுடன் 7 சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. கொழும்பு - மேற்கு கடற்பரப்பில் வைத்து இந்தக் கைது இடம்பெற்றது.

இதில், கைதானவர்கள் 20 முதல் 58 வயதுக்கு இடைப்பட்டவர் களாவர். இவர்கள், ஹிக்கடுவை, அ/ஹங்கல்ல, பேருவளை, கோனு பீனுவெல மற்றும் அலுவல ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

மேலும், குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தடுப்பிலிருந்த இளைஞர் மரணம்; சட்டத்தரணிகள் சங்கம் கரிசனை

கொழும்பு, ஏப். 07

வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் பொலிஸாரின் தடுப்பிலிருந்தவேளை இளைஞன் ஒருவர் உயிரிழந்த சம்பவம் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆழ்ந்த கரிசனை வெளியிட்டுள்ளது.

இந்த சிறை மரணம் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்த சம்பவம் , சம்பவம் இடம்பெற்ற சூழ்நிலைகள், சட்ட அமுலாக்கல், பொறுப்புக்கூறல், பொதுமக்களின் நம்பிக்கை போன்றவற்றுக்கு இந்த சம்பவத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

இந்த சம்பவம் குறித்து பொலிஸ் மா அதிபர் உடனடியான பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும்.

இலங்கை சட்டத்தரணி கள் சங்கம் இந்த விசாரணை களை உன்னிப்பாக அவதானிக் கப் போவதாகவும் சட்டத்தின் ஆட்சி மற்றும் உரிய நடைமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சம்பவங்களை தடுப்பதற்காக இலங்கை பொலிஸார் உட்பட சட்ட அமுலாக்கல் தரப்பினர் அதிக பட்ச கவனம் எச்சரிக்கை பொறுப்புடன் செயல்பட வேண்டும் என கடந்தகாலங்களில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்துவந்துள்ளது.

நீதி வழங்கும் நிர்வாகத்தின் மீதான நம்பிக்கைக்கு இவ்வாறான சம்பவங்கள் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

நீண்டகாலமாக கரிசனைகள் வெளியாகின்ற போதிலும் சீர்திருத்தத்துக்கான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் பொலிஸ் காவலில் மரணங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.

இவ்வாறான நடவடிக்கைகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதில் அதிகாரிகள் மந்தகதியில் செயல்படுகின்றனர்.

இதேபோன்று குற்றவாளிகளை நீதியின் முன்நிறுத்துவதிலும் அதிகாரிகள் மந்த கதியில் செயல்படுகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# அரச நிறுவனங்களில் நிலையான கழிவு முகாமைத்துவம் அவசியம்

## பொது நிர்வாக அமைச்சு

கொழும்பு, ஏப். 07

அரச நிறுவனங்களில் திடக் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்காக அனைத்து அரச நிறுவனங்களும் நிலையான கழிவு முகாமை முறைகளை பின்பற்ற வேண்டும் என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சின் செயலாளர் வெளியிட்ட சுற்றறிகையில், அனைத்து அரசு நிறுவனங்களையும் "த்ரீ-ஆர் எண்ணக்கருவை" கடைப்பிடிக்குமாறு அறிவித்துள்ளது. பல அரசு நிறுவனங்கள் நகர்ப்புறங்களில் அமைந்துள்ளதுடன், அந்த நிறுவனங்களுக்கு தினமும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் மற்றும் அரசு ஊழியர்கள் வருகை தருவதால் ஏற்படும் கழிவுகளை கட்டுப்படுத்த இந்தத் திட்டம் செயல்படுத் தப்படவுள்ளது.

அதன்படி, உத்தியோகபூர்வ நடவடிக்கைகளில் காகிதப் பயன்பாட்டை முடிந்தவரை குறைக்க வேண்டும், ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்ரிக் பயன்பாட்டை கட்டுப்படுத்த வேண்டும்.

கழிவுகளை முறையாக சேகரித்து அகற்று வது மற்றும் கழிவு முகாமைத் துவ நடவடிக்கைகளை கண்காணித்தல் பற்றியும் அந்த சுற்றறிக்கையின் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கை நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து 6 மாத காலத்திற்குள் நிறுவனங்களுக்கு முறையான கழிவு முகாமைத்துவ திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும் - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நிலமும் கடலும் இந்தியாவுக்கு எதிராக மாறாது!

## ஜனாதிபதி அநுர உத்தரவாதமளித்தார் என்கிறார் இந்திய வெளியுறவு செயலர்!



கொழும்பு, ஏப். 07

**இலங்கையின் நிலப்பரப்பை இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்த அனுமதிக்கப் போவதில்லை என்ற உத்தர வாதத்தை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க வழங் கியுள்ள விடயம் இரு நாட்டு தலைவர்களுக்கு இடையிலான கலந்துரையாடலின்போது முக்கியத்துவம் பெற்றிருந்தது. இலங்கையின் நிலப்பரப்பு மாத்திரமல்ல கடல் பரப்பையும் இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்த இடமளிக்கப்பட மாட்டாது என்ற அடிப்படையில் இரு தரப்பு பேச்சுக்கள் நடைபெற்றன என்று இந்திய வெளியுறவு செயலர் விக்ரம் மிஸ்ரி தெரிவித் தார்.**

புதிய பாதுகாப்பு ஒப்பந்தத் தின் ஊடாக இரு நாட்டு படை களும் விஸ்தரிக்கப்பட்ட கூட் டுப் பயிற்சிகள், செயலமர்வு கள், தொழில்நுட்பம் மற்றும் தகவல் பரிமாற்றம் என பரந் துப்பட்ட விடயங்களுடன் கூட்டு நடவடிக்கைகளில் திறன் பட செயல்படவும் வலுவாக கூட்டுநடவடிக்கைகளில் ஈடு படவும் முடிகிறது.

இரு நாட்டு தலைவர்களின் பரஸ்பர பாது காப்பு கரிசனை களின் அடிப் படை யில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச் சாத்திடப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் அவர் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் கூறினார்.


மேலும், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் அண் மைய இந்திய பயணத்தின் போது பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து இணக்கம் காணப்பட் டது. இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இருநாட்டு படைக ளும் விஸ்தரிக்கப்பட்ட கூட்டு பயிற்சிகள், செயலமர்வுகள், தொழில்நுட்பம் மற்றும் தக வல் பரிமாற்றமென பரந்துப் பட்ட விடயங்களுடன் கூட்டு நடவடிக்கைகளில் திறன்பட செயல்பட முடிகிறது. எனவே, இரு நாட்டு தலைவர்களின் பாதுகாப்பு கரிசனைகளின் அடிப்படையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட் டுள்ளது.

எவ்வாறாயினும் இலங்கை யின் நிலப்பரப்பை இந்தியா வுக்கு எதிராக பயன்படுத்த அனுமதிக்க போவதில்லை என்ற உத்தரவாதத்தை ஜனா திபதி அநுர குமார திஸநாயக்க வழங்கியுள்ளார்.

இரு தலைவர்களுக்கு இடை யிலான கலந்துரையாடலின் போது இந்த விடயம் முக்கியத் துவம் பெற்றிருந்தது.

இலங்கையின் நிலப்பரப்பு மாத்திரம் அல்ல கடல் பரப் பையும் இந்தி யாவுக்கு எதிராக பயன்படுத்த இடமளிக்கப் படாது என்ற அடிப்படையில் இரு தரப்பு பேச்சுக்கள் இடம் பெற்றிருந்தன - என்றார். (ஐ)

# கண் பார்வை இழந்த சிறுத்தையின் படத்தை மோடிக்கு வழங்கிய சஜித்!



கொழும்பு, ஏப். 07

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு சஜித் பிரேமதாஸ சிறுத்தை படம் ஒன்றை பரிசாக கொடுத்தார்.

இலங்கை வந்துள்ள இந்திய பிரதமர் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித் தார்.

அதில், வில்பத்து தேசிய பூங்காவில் ஒரு கண் பார்வை இழந்த "ஐ-வன்" என அழைக் கப்படும் பெண் சிறுத்தையின் புகைப்படத்தையே சஜித் வழங் கியிருந்தார்.

அந்த சிறுத்தை ஒரு கண் பார்வை இழந்திருந்தாலும், காட்டின் சவால்களை வெற்றி கரமாக எதிர்கொண்டு வாழும் இந்த சிறப்பான விலங்கு - இலங்கையின் இயற்கை பாரம் பரியம் மற்றும் அழகின் உண் மையான சின்னமாகும்.

அதன் கவர்ச்சிகரமான நீலக் கண் சவால்களை எதிர்கொண்டு அதன் வாழ்க்கை பற்றிய நீண்ட கதையை சொல்கிறது - ஒரு வேளை குளுகோமா, கெட ரெக் அல்லது ஏதாவது விபத்து காரணமாக ஏற்பட்ட நிலை - ஆனால், அது காட்டில் பாது காப்பாக உறுதியாக இருப்பது விலங்குலகின் சவால்களை வெற்றிகொள்வதற்கான சின் னமாகும்.

எவ்வாறாயினும், துரதிர்ஷ் டவசமாக இந்த சிறப்பு விலங்கு கடந்த சில ஆண்டுகளாகக் காணப்படவில்லை. மேலும் அது உயிருடன் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்த முடி யவில்லை என்றும் தெரிவித் துள்ளார். (ஐ)

# ரொஷானின் மனைவியிடம் 4 மணிநேரம் விசாரணை!

கொழும்பு, ஏப். 07

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரண சிங்கவின் மனைவி தினுஷ ாவிடம் சுமார் 4 மணி நேரம் ஊழல் ஒழிப்பு பிரிவு வாக்கு மூலம் பதிவு செய்துள்ளது.

போலியாக பதிவு செய்யப் பட்ட பாரவூர்தி ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணை யில் விடுவிக்கப்பட்ட முன் னாள் அமைச்சர் விஜித் விஜய முனி சொய்சா அளித்த வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த வாக்குமூலம் பெறப்பட்டது.

இதற்கமைய, தினுஷா ரணசிங்கவிடம் நேற்றுமுன் தினம் சுமார் 4 மணி நேரம் வாக்குமூலம் பெறப்பட்டதாக ஊழல் ஒழிப்பு பிரிவு தெரிவித்துள் ளது.

போலியாக பதிவு செய்யப் பட்ட பாரவூர்தியை வைத்தி ருந்த குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா கடந்த ஜனவரி மாதம் 19 ஆம் திகதி வலானை ஊழல் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணை யில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மருத்துவரால் பெண் வன்புணர்வு பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 07

சிகிச்சைக்கு சென்ற இளம்பெண்ணை மருத்துவர் ஒருவர் பாலியல் வன்புணர் வுக்கு உட்படுத்திய குற்றச் சாட்டு தொடர்பில் நீர்கொ ழும்பு பொலிஸார் விசார ணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த மார்ச் 31ஆம் திகதி பல் வலி, தோல் நோய்க்கு சிகிச்சை பெறுவதற்காக தாயா ருடன் சென்ற இளம்பெண்ணே இவ்வாறு மருத்துவரால் வன் புணர்வுக்கு உட்படுத்தப் பட் டதாக பாதிக்கப்பட்ட பெண் நீர்கொழும்பு பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதன்படி, குறித்த இளம் பெண்ணை கடந்த 2 ஆம் திகதி சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் சோதிக்கப்பட் டார். ஆனால், அந்த மருத்துவ அறிக்கையில் தான் திருப்திய டையவில்லை என்று இளம் பெண் பொலிஸாருக்கு கூறி யுள்ளார்.

இதையடுத்து, விசேட மருத் துவ குழுவால் அவரை பரி சோதிக்க பொலிஸார் நட வடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

# இந்திய பிரதமருக்கு ஜனாதிபதி சிறப்பு இரவு விருந்து வழங்கினார்

கொழும்பு, ஏப். 07

இலங்கை வந்துள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதியால் சிறப்பு விருந்து வழங்கப்பட்டது.

ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த இந்திய பிரதமரை ஜனாதிபதி அநுர குமார திஸ நாயக்க வரவேற்றார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை பயணம், பரஸ்பர ஆர்வமுள்ள பல்வேறு துறைகளில் இரு நாட்டு மக்களி டையே அதிக நெருக்கம் மற் றும் ஒத்துழைப்புக்கான வாய்ப் புகளை விரிவுபடுத்தும் என்று நிகழ்வில் உரையாற்றிய ஜனா திபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

மேலும், "நாங்கள் விருந் தோம்பலை விரும்பும் மக்கள். மேலும், அனைத்து விருந்தினர் களையும் நாங்கள் அன்புடன் அரவணைக்கிறோம்.

பாக்கு நீரிணையைக் கடந்து செல்லும் எமது நண்பர் களை மிகவும் அன்பான இத யத்துடன் அரவ ணைப்போம் என்பதை நான் நினைவுகூர கிறேன்.

சிறிய ஆனால், அன்பான இதயம் கொண்ட மக்களால் நிறைந்த இந்த அற்புதமான தீவுக்கு உங்கள் நாட்டு மக்கள் வருகை தருவதை நாம்




பார்ப்பது எமது எதிர்பார்ப்பா கும். நாம் எப்போதும் நம் நண்பர்களிடம் கூறும் ஒரு விடயம், "மீண்டும் வாருங்கள்" என்பதுதான். எமது இதயங்கள் உங்களை வரவேற்கத் தயாராக உள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி யின் சிறந்த ஆரோக்கியத்துக் கும், இந்திய மக்களின் தொடர்ச்சியான முன்னேற்றத் துக்கும், செழிப்புக்கும், நமது இரு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து வளர்ந்து வரும் ஒத்துழைப்பு மற்றும் நட்பு என்ற உன்னத விருப்பங்களுக் காக நாம் ஒரே நோக்கத்துட னும் அன்பான இதயங்களுட னும் ஆசிர்வதிப்போம்." - என்றும் கூறினார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிநாட்டலுவல்கள், வெளி நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா துறை அமைச்சர் விஜித ஹேரத், சுகாதாரம் மற் றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உட்பட அமைச்சர்கள், இந்திய வெளியு றவு அமைச்சர் எஸ். ஜெய்சங் கர், தேசிய பாதுகாப்பு ஆலோ சகர் அஜித் டோவல், வெளி யுறவு செயலாளர் விக்ரம் மிஸ்ரி மற்றும் இலங்கைக்கான இந் திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா உள்ளிட்ட இராஜதந்திரிகள் குழுவும் இந்த விருந்தில் கலந்து கொண்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்சம் ஊழலற்ற பணித்துறையை நோக்கி மட்டக்களப்பில் விசேட திட்டம் முன்னெடுப்பு



மட்டக்களப்பு, ஏப். 07

**இலஞ்சம் மற்றும் ஊழலற்ற பணித்துறையை நோக்கிய விசேட செயல்திட்ட செயலமர்வு மட்டக்களப்பில் நடத்தப் பட்டுள்ளது.**

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்ரினா முரளிதரனின் ஆலோசனையின் பேரில் மேல திக மாவட்ட அரசாங்க அதிப ரின் வழிகாட்டுதலின் கீழ் இந் தத் திட்டம் முன்னெடுக்கப்பட் டது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான இலஞ்சம் மற்றும் ஊழலற்ற பணித்துறை தொடர்பான தெளிவூட்டல் செயலமர்வு மண்முனை வடக்கு டேபா மண்டபத்தில் கடந்த 4ஆம் திகதி நடைபெற்றது.

ஊழல் பற்றி இலங்கையின் சட்ட ரீதியான பொருள் கோடல் தொடர்பான விளக் கங்கள், 2023 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இலஞ்ச ஊழல் ஒழிப்புச் சட்டம் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டன.

இந்தச் செயலமர்வின் வளவாளராக மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் திருமதி வில்வரத்னம் சிவப்பி ரியா கலந்து கொண்டார்.

அத்துடன் ஊழலின் பல்வே றுபட்ட வடிவங்கள் மற்றும் ஊழலின் வகைகள், சட்டத் துக்கு எதிரான கையூட்டல் பணிக்கொடை, தரகு பணம் பெற்றுக் கொள்ளல், ஊழலின் தாக்கங்கள், முறையற்ற பார பட்சம், ஊழலைத் தடுக்கும் சட்ட திட்டங்கள், மேலும் நடைமுறைசார் இலஞ்சம் மற் றும் ஊழல் தொடர்பான விடய ஆய்வுகள் மூலம் உத்தியோகத் தர்களுக்கு தெளிவூட்டப்பட் டன.

(எ)

# 'ஒரு பிடி மண் விவசாயத்துக்கு' காரைதீவில் சந்தைநாள் நிகழ்வு



காரைதீவு, ஏப். 07

விவசாய ஊக்குவிப்பு செயல்திட்டத்துக்கு அமை வாக, அம்பாறை பிரதி விவ சாயப் பணிப்பாளர் அதிகார பிரதேசங்களில், ஒரு பிடி மண் - விவசாய நிலத்துக்கு வளமான சிறுபோகம் வளமான எதிர் காலம் - 2025 எனும் தொனிப் பொருளில் ஏற்பாடு செய்யப் பட்ட, விவசாய உற்பத்தி முயற் சியாளர்களை ஒன்றி ணைக்கும் சந்தை நாள் நிகழ்வு காரைதீவு விவசாய விரிவாக்கல் அலுவல கத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா கலந்து கொண்டார்.

நிந்தவூர் வலய உதவி விவசாயப் பணிப்பாளர் ருக்மன் சோமரத்ன, சம்மாந்துறை, தம் பிலுவில், அட்டாளைச்சேனை வலயங்களுக்கான உதவி விவ சாயப் பணிப்பாளர்கள், காரை தீவு சுகாதார வைத்திய அதி காரி ஜீவராணி சிவசுப்பிரமணி யம், காரைதீவு விவசாய விரிவாக்கல் நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி பி. பிரதீப் மற்றும் அம்பாறை மாவட்ட மகளிர் விவசாய விரிவாக்கல் பாடவிதான உத் தியோகத்தர் திருமதி ஜீவிதா சிந்தூரியன் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் உத்தியோகத் தர் மற்றும் சமநல சேவை உத்தியோகத்தர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(எ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவுக்கான கட்டட திறப்பு விழா



நாவிதன்வெளி, ஏப். 07

புதுப்பிக்கப்பட்ட நாவிதன் வெளி பிரதேச செயலக சிறுவர் மகளிர் அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவுக்கான கட்டடத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் நிகழ்வு நாவிதன் வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிர மற்றும் அம்பாறை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ஏ. எல். மஹ்ரூப் ஆகியோர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டனர்.

நாவிதன்வெளி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் பே. பிரணவரூபன், கணக்காளர் க. நிஸ்வி யஹ்சர், பிரதித் திட்டமிடல் பணிப் பாளர் திருமதி. தி. கிருபை ராஜா, நிர்வாக உத்தியோகத்தர் ஓ. கே. கீர்த்தி குசுமிந்த, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் செ. சிவம் ஆகியோரும் சமூக சேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறுவர், மகளிர் அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர் கள் மற்றும் பிரதேச செயலக அலுவலக, வெளிக்கள உத்தி யோகத்தர்கள் போன்ற பலரும் கலந்து கொண்டனர். (எ- 07)

# சீனன்குடாவில் கஞ்சாவுடன் இளைஞன் கைது

திருகோணமலை, ஏப். 07

திருகோணமலை - சீனன் குடா பொலிஸ் பிரிவுக்கு உட் பட்ட மீன்பிடித் துறைமுகத் துக்கு அருகில் கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் கடந்த 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் திருகோணமலை முகாமுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந் தேக நபர் கைது செய்யப்பட் டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந் தேக நபர் திருகோணமலை பிரதேசத்தைச் சேர்ந்த 20 வய துடைய இளைஞன் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 500 கிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இதனையடுத்து, கைதான வர் சீனன்குடா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட் டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீனன்குடா பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (எ)

# கல்முனையில் அஜா இல்லம் திறப்பு



கல்முனை, ஏப். 07

குடும்பத்தால் கைவிடப் பட்ட அல்லது தனிமையை உணர்கின்ற முதியோர்களுக் காக நேற்று முன்தினம் சனிக் கிழமை கல்முனையில் அஜா இல்லம் திறந்து வைக்கப்பட் டது.

அம்பாறை மாவட்டத்தில் பெண்களுக்காக முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த முதியோர் இல்லத் திறப்பு விழா அஜா இல்ல ஸ்தாபகர் திருமதி சோதினி அருள்ராஜ் தலைமை யில் நடைபெற்றது.

இந்தத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜே. அதிசயராஜ் கலந்து சிறப் பித்தார். கல்முனை தலைமை யக பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா உள்ளிட் டவர்கள் கலந்து கொண்டனர்.

(எ- 01, 07)

# ஓட்டமாவடியில் விபத்து தாயும் மகனும் காயம்!

மட்டக்களப்பு, ஏப். 07

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்டமா வடி பிரதான வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதி யம் இடம்பெற்ற விபத்தில் இளம் தாயும் ஏழு வயது மகனும் காயமடைந்துள்ளனர்.

பேருந்தில் பயணித்த இருவ ரும் அதிலிருந்து இறங்கி வீதி யைக் கடக்கும் போது மோட் டார் சைக்கிளில் மோதினர்.

விபத்தில் காயமடைந்த தாயும், மகனும் சிகிச்சைக்காக வாழைச்சேனை ஆதார மருத் துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)



"ஈழத்து பழநி" என அழைக்கப்படும் கிழக்கின் சித்தாண்டி இலுக்குப்பொத்தானை வேலோடுமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மார் நிலநடுக்கத்தில் 30 இலட்சம் பேர் பாதிப்பு!

## 3,354 பேர் பலி, 4,508 பேர் காயம் - ஐ. நா. தகவல்

யங்கூன், ஏப்.07

**மியன்மாரில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் 30 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.3,354 பேர் பலியாகினர். 4,508 பேர் காயமடைந்தனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**

மியன்மாரின் 2ஆவது பெரிய நகரான மண்டாலே நகரருகே கடந்த மாதம் 28ஆம் திகதி சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிக்டரில் 7.7 ஆக பதிவான இந்த நிலநடுக்கத் துக்கு பின்பும் தொடர்ந்து நிலநடுக்க அதிர்வுகள் ஏற்பட்டன.

இதனால், கட்டடங்கள் பல அடியோடு சரிந்தன. 2 பாலங்கள் இடிந்து விழுந்தன. இதனைத் தொடர்ந்து மண்டாலே, சகாயிங், மாக்வே, வடகிழக்கு ஷான் மற்றும் பகோ பகுதிகளில் அவசரகால நிலையை அரசு உடனடியாக பிறப்பித்தது. மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன.

இந்த நிலையில், நிலநடுக்கத்தால் 3,354 பேர் பலியாகினர். 4,508 பேர் காயமடைந்துள்ளனர்.

220 பேர் காணாமல் போயுள்ளனர் என அந்த நாட்டு அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. நிலநடுக்கம் ஏற்பட்டு ஒரு வாரம் ஆகியும், பலருக்கும் புகலிடம் எதுவும் இல்லை. வீடுகளை இழந்து பலரும் தவித்து வருகின்றனர்.

நிவாரணப் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், மக்கள் இன்னும் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியாமல் தவித்து வருகின்றனர். இந்த நிலநடுக்கத்தால் 30 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ. நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

உள்நாட்டு போரால் மியன்மார் பாதிக்கப்பட்டுள்ள சூழலில், தகவல்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டு இணையத்தள சேவையும் நிறுத்தப்பட்டது. இதனால், சேத விவரங்கள் பற்றிய தகவல்கள் வெளிவருவதிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அந்த நாட்டில், ஏற்பட்டுள்ள உள்நாட்டுப் போரால் 30 இலட்சம் பேர் புலம் பெயர்ந்துள்ளனர்.

2 கோடி பேர் உதவி தேவைப்படுவோராக உள்ளனர் என்றும் ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது. (எ)

# ஆடை ஏற்றுமதியை அதிகரிக்க வாய்ப்பு

புதுடில்லி, ஏப். 07

அமெரிக்காவால் இந்தியாவுக்கு 27 சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுடன் ஆடைத்துறையில் கடும் போட்டியாளர்களாக உள்ள வியட்நாமுக்கு 46 சதவீதம், இலங்கைக்கு 44 சதவீதம், பங்களாதேஷுக்கு 37 சதவீதம் சீனாவுக்கு 34 சதவீதம் என்ற அளவில் வரி விதிக்கப்பட்டுள்ளது. உற்பத்திக்கான செலவு, போட்டி த்தன்மையை ஒப்பிட்டால் இது இந்தியாவுக்கு பெரும் நன்மையை தரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க சந்தைக்கான ஆடை ஏற்றுமதியில் இந்தியா பல அடிகள் முன்னோக்கி செல்ல முடியும்.

தற்போது அமெரிக்க ஆடைச்சந்தையை சீனா 21 சதவீதம், வியட்நாம் 19 சதவீதம், பங்களாதேஷ் 10 சதவீதம் என்ற அளவில் ஆக்கிரமித்துள்ளன. இதில், இந்தியாவின் பங்களிப்பு வெறும் 6 சதவிகிதம் தான். தற்போதைய வரி விதிப்பால் இந்தியாவின் ஏற்றுமதி அதிகரிக்கும். ஐரோப்பிய நாடுகளுக்கு இந்தியாவை விட வரி குறைவு என்றாலும் அந்த நாடுகள் அமெரிக்க ஆடைச்சந்தையில் 3 சதவீதம் மட்டுமே பங்கெடுத்துள்ளன.

அமெரிக்காவின் புதிய வரி விதிப்பு முறையால் கிடைக்கும் வாய்ப்பை மிகச்சரியாக பயன்படுத்துவதற்கு இந்திய மத்திய அரசு சில உதவிகளை செய்ய வேண்டும் என ஆடைத்தொழில்துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். முக்கியமாக அமெரிக்காவிலிருந்து பஞ்சு இறக்குமதி செய்வதற்கு இந்தியாவில் விதிக்கப்படும் 11 சதவீத வரியை முழுவதுமாக நீக்க வேண்டும் என திருப்பூர் ஆடை ஏற்றுமதியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். அவ்வாறு செய்யும்பட்சத்தில், இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் தைத்த ஆடைகளுக்கும் அந்த நாட்டில் வரி விலக்கு கிடைக்க வாய்ப்புள்ளது என்றும் கூறினர். (எ)

# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்

## 9 குழந்தைகள் உட்பட 18 பேர் பலி

கீவ், ஏப். 07

உக்ரைன் மீது ரஷ்யா சரமாரி ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. இதில், குழந்தைகள் உட்பட 18 பேர் பலியாகினர்.

உலகின் மிகப்பெரிய இராணுவக் கூட்டமைப்பான நேட்டோவில் இணைய உக்ரைன் முயன்று வருகிறது. இதற்கு ஆரம்பம் முதலே ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்தது.ஆனால், தனது முடிவில் உறுதியாக இருந்ததால் உக்ரைன் மீது ரஷ்யா 2022ஆம் ஆண்டு போர் தொடுத்தது. கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.


இதில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் செயல்படுகின்றன.

இந்த நிலையில், உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா மேலும் தீவிரப்படுத்தியது. இதன் ஒருபகுதியாக உக்ரைனின் கிரிவி ரிஹ் நகரம் மீது நேற்று முன்தினம் ரஷ்யா சரமாரி ஏவுகணை தாக்குதல் நடத்தியது.

இதில் அங்குள்ள விளையாட்டு மைதானம், அடுக்குமாடி குடியிருப்புகள் போன்றவை இடிந்து தரைமட்டமாகின. இந்தத் தாக்குதலில் 9 குழந்தைகள் உட்பட 18 பேர் பலியாகினர். படுகாயமடைந்த 60இற்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

# ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்க படைகள் தாக்குதல்

## வீடியோவை வெளியிட்டார் ட்ரம்ப்



வாஷிங்டன், ஏப். 07

ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்திய வீடியோவை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலைத் தளத்தில் பகிர்ந்துள்ளார்.

காஸாவில் தாக்குதல் நடத்தும் இஸ்ரேலுக்கு எதிர்ப்பு தெரிவித்து செங்கடல் வழியாக செல்லும் கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். இதனால் பாதிப்படைந்த அமெரிக்கா சமீப காலமாக ஏமனில் உள்ள ஹவுதி படைகளை குறிவைத்து தாக்கி அழித்து வருகிறது. அந்த வகையில், குழுவாக நின்றிருந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்தும் வீடியோவை ட்ரம்ப் பகிர்ந்துள்ளார்.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட அனைவரும் ஹவுதி படையினர் என்றும், அவர்கள் கட்டளைக்காக அங்கு கூட்டமாக காத்திருந்ததாக ட்ரம்ப் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்ட பதிவில், இனி இந்த ஹவுதிகளால் நமது கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படாது- என்று தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதலில் பலியானவர்கள் குறித்த விவரம் வெளியிடப்படவில்லை.

ஆனால், இந்தத் தாக்குதல் பொதுமக்கள் மீது நடத்தப்பட்டதாகவும், இதன் மூலம் ட்ரம்ப் போர்க் குற்றத்தில் ஈடுபட்டு வருவதாகவும் ஒரு தரப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ)

# 86 மாவோயிஸ்ட்கள் சரண்

புதுடில்லி, ஏப். 07

இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் நேற்று முன்தினம் 86 மாவோயிஸ்ட்கள் பொலிஸில் சரணடைந்துள்ளனர். இவர்களுக்கு பொது மன்னிப்பு அளிக்கப்பட்டதோடு உடனடி நிதி உதவியாக இலங்கை மதிப்பில் தலா 87 ரூபாய் வழங்கப்பட்டது.

தெலுங்கானா, சத்தீஸ்கர், ஒடிசா ஆகிய மாநிலங்களில் மாவோயிஸ்ட்களின் நடமாட்டம் அதிகமாகவுள்ளதால், அடிக்கடி இந்த மாவட்டங்களில் ஆயுதப்படையினர், பொலிஸார் வனப்பகுதிகளில் ரோந்துப் பணிகள் மேற்கொண்டு வருகின்றனர். மேலும், பொலிஸார் மாவோயிஸ்ட்களுடன் தீவிர துப்பாக்கிச் சூட்டிலும் ஈடுபடுகின்றனர். இதில் இரு தரப்பிலும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டாலும், சமீப காலமாக அதிகளவில் மாவோயிஸ்ட்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் 86 மாவோயிஸ்ட்கள் தெலுங்கானா மாநில பத்ராத்ரி கொத்தகூடம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர்.

சரணடைந்தவர்கள் அனைவரும் சத்தீஸ்கர் மாநிலத்தை சேர்ந்தவர்களாவர். இவர்கள் மீது தெலுங்கானா, சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. சரணடைந்தவர்களில் 66 பேர் ஆண்கள், 20 பேர் பெண் மாவோயிஸ்ட்கள் ஆவர்.

தெலுங்கானா அரசு ஏற்கனவே அறிவித்தபடி, சரணடையும் மாவோயிஸ்ட்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. மேலும், அவர்கள் சமூகத்துடன் இணைந்து வாழ்வதற்கு ஏற்றவாறு, 5 ஏக்கர் விவசாய நிலம், பசு மாடுகள், ஆடு, கோழி போன்றவை வளர்க்க அரசு நிதி உதவி வழங்கும் என உத்தரவாதம் அளிக்கப்பட்டது. மேலும், அவர்களுக்கு உடனடி உதவியாக 86 பேருக்கும் தலா ரூ.25 ஆயிரம்(இலங்கை மதிப்பில் 87 ஆயிரம் ரூபாய்) நிதி உதவியாக வழங்கப்பட்டது. (எ)

# 9. 69 வீத வளர்ச்சியுடன் தமிழகம் புதிய உச்சம்

## முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஏப். 07

தமிழகம் 9. 69 சதவீத வளர்ச்சியுடன் பொருளாதாரத்தில் புதிய உச்சத்தை பதிவு செய்து, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக திகழ்வதாக, மத்திய அரசின் தரவுகளை சுட்டிக்காட்டி தமிழக அரசு தெரிவித்துள்ளது. இதேவேளை, ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டொலர் பொருளாதாரம் எனும் பேரிலக்கை நோக்கி வலிமை, உறுதியோடு தமிழகம் விரைந்து கொண்டிருப்பதாக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.


இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், இந்தியாவில் நடப்பு 2024 - 25ஆம் ஆண்டில் தமிழகம் 9.69 சதவீத உண்மை வளர்ச்சி வீதத்துடன் (பணவீக்கத்தை கணக்கில் கொள்ளாமல் மதிப்பிடுவது) மிக அதிக வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் தமிழகம் அடைந்த மிக உயர்ந்த வளர்ச்சி வீதம் இது. அதேபோன்று, 2024 - 25இல் தமிழகம் 14.02 சதவீத பெயரளவு வளர்ச்சி வீதத்தை (பண வீக்கத்தையும்கணக்கில்கொண்டு மதிப்பிடுவது) பெற்று நாட்டிலேயே முதல் மாநிலமாக திகழ்கிறது என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அபார வெற்றி!



முல்லாப்பூர், ஏப். 07

50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வீழ்த்தி ராஜஸ்தான் றோயல்ஸ் அணி அபார வெற்றி பெற்றது.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணியில் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய ஜெய்ஸ்வால் - சஞ்சு சாம்சன் இருவரும் அணிக்கு நல்ல அடித்தளம் அமைத்து கொடுத்தனர்.

முதல் விக்கெட்டுக்கு 89 ஓட்டங்கள் இணைப் பாட்டம் அமைத்த நிலையில் சஞ்சு சாம்சன் 38 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்திலேயே ஜெய்ஸ்வால் 67 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய நிதிஷ் ராணா 12 ஓட்டங்களிலும், சிம்ரொன் ஹெட்மயர் 20 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இறுதி கட்டத்தில் ரியான் பராக் (43 ஓட்டங்கள்), துருவ் ஜூரெல் (13 ஓட்டங்கள்) அதிரடியாக விளையாட ராஜஸ்தான் அணி 200 ஓட்டங்களை கடந்தது.

இறுதியில் 20 ஓவர்கள் முடிவில் ராஜஸ்தான் அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 205 ஓட்டங்கள் அடித்தது. பஞ்சாப் தரப்பில் பெர்குசன் 2 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 206 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் பஞ்சாப் அணி களமிறங்கியது. ராஜஸ்தான் அணி தரப்பில் முதல் ஓவரை வீசிய ஜோப்ரா ஆர்ச்சர், முதல் பந்தில் பிரியான்ஷூ ஆர்யாவை வீழ்த்தினார். தொடர்ந்து கடைசி பந்தில் ஸ்ரேயஸ் ஐயரை 10 ஓட்டங்களில் ஆட்டமிழக்கச் செய்தார். ஒரே ஓவரில் 2 முக்கிய விக்கெட்களை வீழ்த்தி ஆர்ச்சர் அசத்தினார்.

பஞ்சாப் அணியில் தொடர்ந்து களமிறங்கிய பிரப்சிம்ரன் 17 ஓட்டங்களிலும், மார்கஸ் ஸ்ரொய்னிஸ் ஓர் ஓட்டத்திலும் ஆட்டமிழந்து அதிர்ச்சி அளித்தனர். அடுத்து வந்த நேஹால் வதேரா மற்றும் கிளென் மக்ஸ்வெல் இருவரும் அதிரடியாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். நேஹால் வதேரா அரைச்சதம் கடந்த நிலையில் 62 ஓட்டங்களில் வெளியேறினார். மக்ஸ்வெல் 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இந்த நிலையில் 20 ஓவர்கள் முடிவில் பஞ்சாப் அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 155 ஓட்டங்கள் எடுத்தது. இதையடுத்து 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வீழ்த்தி ராஜஸ்தான் றோயல்ஸ் அபார வெற்றி பெற்றது. (எ)

# சென்னையை வீழ்த்தி டில்லி அசத்தல் வெற்றி



சென்னை, ஏப். 07

25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை அணியை வீழ்த்தி டில்லி அணி அசத்தல் வெற்றி பெற்றது.

ஐ. பி. எல். தொடரில் நேற்று நடைபெற்ற முதல் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின. சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்களை இழந்து 183 ஓட்டங்கள் அடித்தது. அதிகபட்சமாக கே. எல். ராகுல் 77 ஓட்டங்கள் அடித்தார். சென்னை தரப்பில் கலீல் அகமது 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 184 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய சென்னை அணி ஆரம்பம் முதலே விக்கெட்களை இழந்து தடுமாறியது. தொடக்க ஆட்டக்காரரான ரச்சின் ரவீந்திரா 3 ஓட்டங்களிலும், ருதுராஜ் 5 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட டெவான் கொன்வே 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

விஜய் சங்கர் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்த மறு முனையில் சென்னை விக்கெட்களை பறிகொடுத்தது. ஷிவம் துபே 18 ஓட்டங்களிலும், ஜடேஜா 2 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். நடப்பு சீசனில் தொடர்ந்து மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய சென்னை இந்த ஆட்டத்திலும் அதனையே தொடர்ந்தது.

இதனையடுத்து விஜய் சங்கருடன் மகேந்திர சிங் டோனி கை கோர்த்தார். இருவரும் இணைந்து சென்னைக்கு வெற்றியைத் தேடி கொடுப்பர் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், இருவரும் பொறுமையாகவே துடுப்பாட்டம் செய்தனர். இதனால் ஓட்ட எண்ணிக்கை மந்தமாகவே நகர்ந்தது. இவர்களை அடித்து ஆட விடாமல் டில்லி பந்து வீச்சாளர்கள் நேர்த்தியாக பந்துவீசினர். விஜய் சங்கர் 43 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். மேற்கொண்டு விக்கெட்கள் விழாமல் பார்த்து கொள்வதிலேயே கவனம் செலுத்திய இருவரும் ஓட்டங்கள் குவிக்கவில்லை.

இதனால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியால் 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 158 ஓட்டங்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதன் மூலம் டில்லி 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியை பதிவு செய்தது. சென்னை தரப்பில் விஜய் சங்கர் 69 ஓட்டங்களுடனும் (54 பந்துகள்), மகேந்திர சிங் டோனி 30 ஓட்டங்களுடனும் (26 பந்துகள்) களத்தில் இருந்தனர். டில்லி தரப்பில் விப்ராஜ் நிஹாம் 2 விக்கெட்கள் வீழ்த்தினார். (எ)

# மும்பை அணியுடன் இணைகிறார் பும்ரா

மும்பை, ஏப். 07

காயத்திலிருந்து முழுமையாக மீண்டுள்ள இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரீத் பும்ரா, விரைவில் மும்பை இந்தியன்ஸ் அணியுடன் இணையவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பும்ரா, கடந்த ஜனவரி மாதம் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நடைபெற்ற கடைசி டெஸ்ட் போட்டியின் போது முதுகு பகுதியில் காயமடைந்தார்.

அதன் பின் னர் அவர், எந்தவிதமான கிரிக்கெட் போட்களிலும் பங்கேற்கவில்லை. காயத்துக்காக பெங்களூருவில் உள்ள பி.சி.சி.ஐ. திறன்மிகு மையத்தில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில், பும்ராவுக்கு உடற்தகுதி சான்றி தழை பி.சி.சி.ஐ. வழங்கியுள்ளதாகவும் இதனால் அவர். ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியில் விரைவில் இணையக்கூடும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மும்பை இந்தியன்ஸ் அணியுடன் இணையும் பும்ரா இரு பயிற்சி ஆட்டங்களுக்குப் பின்னர் எதிர்வரும் 13ஆம் திகதி டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் களமிறங்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(எ)

# ‘எங்களால் முடியவில்லை’ ருதுராஜ் கடும் வேதனை

சென்னை, ஏப். 07

தொடர் தோல்விகளைத் தவிர்க்க நாம் போராடி வருகிறோம். இருப்பினும், எங்களால் முடியவில்லை என்று சென்னை அணியின் தலைவர் ருதுராஜ் கடும் வேதனை வெளியிட்டுள்ளார்.

டில்லி அணிக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியை தழுவியது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி. றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு, ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் டில்லி என அடுத்தடுத்து மூன்று போட்டிகளில் தோல்வி அடைந்துள்ளது சி.எஸ்.கே.

இந்த நிலையில், தோல்வி குறித்து சி.எஸ்.கே. அணியின் தலைவர் ருதுராஜ் கெய்க்வாட் கூறுகையில், “இந்த ஆட்டம் மட்டும் இல்லை, கடந்த 3 ஆட்டங்களுமே எங்கள் வழியில் அமையவில்லை. 3 துறைகளிலும் எங்களால் முடிந்தவரை சிறப்பாக செயல்பட முயன்றோம்.

துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் பவர்பிளேவில் நாங்கள் செயல்படும் விதம் கவலை அளிக்கும் வகையில் உள்ளது. இது 2ஆவது ஆட்டத்தில் இருந்தே தொடர்கிறது.

நாங்கள் சிறப்பாக விளையாட முயற்சி செய்கிறோம். ஆனால் அது நடைபெறவில்லை, பவர்பிளேயில் யார் பந்து வீச வருகிறார்கள் என்பதில் நாங்கள் அதிக அக்கறை காட்டுகிறோம்.

முதல் அல்லது இரண்டாவது ஓவரில் விக்கெட்டை இழந்து வருகிறோம்”- என்றார். (எ)

# எம். எஸ். டோனியின் மோசமான சாதனை


சென்னை, ஏப். 07

தான் எதிர்கொண்ட 19 ஆவது பந்தில் முதல் பௌண்ட்ரியை அடித்து எம். எஸ். டோனி மோசமான சாதனை படைத்துள்ளார்.

ஐ. பி. எல். தொடரில் சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - எல்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 183 ஓட்டங்கள் எடுத்தது.

தொடர்ந்து 184 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய சென்னை 20 ஓவரில் 5 விக்கெட்களை இழந்து 158 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லி வெற்றி பெற்றது.

சி. எஸ். கே. அணியின் தோல்விக்கு மெதுவாக விளையாடியதே முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. ஏனென்றால் கடைசி 5 ஓவர்களில் இலக்கை நோக்கி செல்வதற்கான அதிரடி ஆட்டத்தை கூட டோனி, விஜய் சங்கர் வெளிப்படுத்தவில்லை. இதன் மூலம் இந்தத் தொடரில் முதல் வீரராக மோசமான சாதனை ஒன்றை டோனி படைத்துள்ளார்.இந்த இன்னிங்ஸில் டோனி ஒரு சிக்ஸ், ஒரு பௌண்ட்ரி மட்டும் அடித்திருந்தார். ஆனால், அவரின் முதல் பௌண் டரி 19ஆவது பந்தில் தான் வந்தது. இந்த சீசனில் துடுப் பாட்டம் செய்த வீரர்களில் முதல் பௌண்ட்ரியை அடிக்க அதிக பந்துகளை எடுத்து கொண்ட வீரராக டோனி பெயர் எடுத்துள்ளார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதை...

இதன்போது, ஐந்து சந்தி பகுதியைச் சேர்ந்த 18 வயது இளைஞன் 10 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் 75 போதை மாத்திரைகள் அவரின் வீட்டிலிருந்து கைப்பற்றப் பட்டன.

சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-05)

## தாயார்...

வயதான அவரின் மனநலம் பாதிக்கப்பட்ட மகனை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஜீ.எஸ்.பி...

இவற்றின் துரித அபிவிருத்தியில் பயன்பெறுவதற்கு எமக்கு சிறந்த வாய்ப்பிருக்கிறது. எவ்வாறிருப்பினும், அதற்கான முன்னெடுப்புக்களுக்கு தமது சிந்தனையை மாற்றிக் கொள்ள வேண் டும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியமைத்ததிலிருந்து சுவர்களை உடைத்து, பாலங்களை அமைக்குமாறு நான் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறேன். அவ்வாறு சுவர்களை உடைத்து, பாலங்களை அமைத்தவர் களுக்கு அமெரிக்காவால் தடை விதிக் கப்படவில்லை. மாறாக, பாலங்களை உடைத்து சுவர்களை அமைத்தவர்களுக்கு தடையிருக்கிறது. இதன் மூலம் நாம் பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

வருடாந்தம் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளுக்கு அரச குழுவொன்று செல்வது வழமையாகும். இதன்போது அமெரிக்காவின் வரி குறித்து பேசப்படப் போகிறதா என்பது எமக்குத் தெரியாது. நாணய நிதியத்தில் இருப்பதால் எமக்கு நிவாரணம் வழங்குமாறு கோரினால் அதனை ஏற்கக் கூடியவரல்ல ட்ரம்ப். வியட்நாம் ட்ரம்பிடம் முன்மொழிந்துள்ளதை போன்று அசாதாரணமான வாய்ப்பொன்றை வழங்கினால் வரி குறைப்பு குறித்து சிந்திக்க முடியும் என்று அமெரிக்கா கூறுகிறது. அவ்வாறெனில், அந்த அசாதாரணமான வாய்ப்பு என்ன என்பது குறித்து அரசாங்கமும் வெளிவிவகார அமைச்சும் தீர்மானிக்க வேண்டும்.

பிராந்திய பொருளாதார ஒப்பந்தங்களுக்கு செல்லாமல் நாட்டுக்கு தேவையான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியாது. சிந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் எம்மால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. ஐக்கிய மக்கள் சக்தியின் ப்ளூ பிரின்ட் வெளியீட்டில் இது தொடர்பில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

இந்திய பிரதமருடன் தற்போது பேச வேண்டிய மிக முக்கிய காரணி எக்டா வாகும். பொருளாதார ரீதியில் எவ்வாறு இணைந்து செயல்படுவது, தென்னிந்திய 5 மாநிலங்களின் தீவிர அபிவிருத்தியிலிருந்து எவ்வாறு பயன் பெறுவது என்பது குறித்து கலந்தாலோசிக்க வேண்டும். ஜி.எஸ்.பி. பிளஸ் இருப்பதால் அமெரிக்க வரி அதிகரிப்பால் சிக்கல் இல்லை என்று சிலர் கூறுகின்றனர்.

இவ்வாண்டுடன் ஜி.எஸ்.பி. பிளஸ் நிறைவடையப் போகிறது. ஐரோப்பிய பாராளுமன்றத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ் தொடர்பான புதிய முன்மொழிவுகள் முன்வைக்கப்படவுள்ளன. எனவே புதிய சட்டத்துடன் புதிய ஜி.எஸ்.பி. பிளஸ் வரவுள்ளது. அதற்கமைய தற்போது ஜி. எஸ்.பி. பிளஸ் கிடைக்கப் பெறும் சுமார் 6 நாடுகள் அதனை இழக்க நேரிடும்.

பயங்கரவார தடைச் சட்டம், நல்லிணக்கம் மற்றும் ஊழல் ஒழிப்பு தொடர்பில் இலங்கை என்ன செய்தி ருக்கிறது என்பதையும் ஐரோப்பிய ஒன்றியம் ஆராயும். இன்னும் இரு வாரங்களில் ஐரோப்பிய ஒன்றிய தூதுக் குழு இலங்கை வரவுள்ளது. வந்ததன் பின்னர் நிச்சயம் இவை தொடர்பில் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். (ஐ)

## யாழில்...

இது தொடர்பில் அவர் தனது எக்ஸ் தளத்திலும் பதிவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் நிறுவுவதற்கான பணிகள் கடந்த 2017 ஆம் ஆண்டு ஆரம்பமாகின. இதற்காக மண்டை தீவில் இலங்கை கிரிக்கெட் சபையின் அப்போதைய தலைவர் திலங்க சுமதி பால தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டிருந்தனர். அத்துடன், இடத்தையும் அடையாளம் கண்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஈழத்...

கொண்டு தான் முன்வைத்த அனைத்து கோரிக்கைகளை யும் பிரதமர் நிறைவேற்றியுள்ளார்.

தமிழக மீனவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட் ள்ளமை, மீனவர்களின் படகுகள் மீட்கப்பட்டமை, உள்ளிட்டவை தான் பிரதமரிடம் முன்வைத்த கோரிக்கைகளாலேயே சாத்தியமாகின என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கை தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இலங்கைத் தமிழர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவும் இந்தியப் பிரதமர் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார். கச்சதீவைத் தாரைவார்த்தவர்களே இன்று அதை மீட்க வேண்டும் எனப் பேசி வருகின்றனர். இந்திய பிரதமர் கச்சதீவை மீட்டு, இலங்கைத் தமிழர்களுக்குத் தனி நாடு அமைந்திட ஆவன செய்வார்- என்றார். (ஐ)

## இலங்கை...

பிரதமரும் ஒரே வாகனத்தில் பயணித்து மாஹோ - ஓமந்தை ரயில் சமிக்ஞை கட்டமைப்பை தொடக்கி வைத்தனர்.

இதைத் தொடர்ந்து, நேற்று பிற்பகல் அவர் அநுராதபுரத்திலிருந்து ஹெலிகொப்டர் மூலமாக தமிழகத்தின் இராமேஸ்வரத்தை சென்றடைந்தார். இலங்கையிலிருந்து புறப்பட முன்னர் அவர் தனது எக்ஸ் தளத்தில்,

"எனது வருகையின் போது வழங்கப்பட்ட அன்புக்காக ஜனாதிபதி திஸநாயக்க, மக்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்துக்கு ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கொழும்பாக இருந்தாலும் சரி, அநுராதபுரமாக இருந்தாலும் சரி, இந்தப் பயணம் நமது இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான கலாசார, ஆன்மீக மற்றும் நாகரிக உறவுகளை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இது நிச்சயமாக நமது இரு தரப்பு உறவுகளுக்கு உத்வேகத்தை சேர்க்கும்." - என்று குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை மற்றும் இந்தியா இடையே "நூற்றாண்டு நட்புறவின் வளமான எதிர்காலத்துக்கான உறுதிப்பாடு" எனும் எண்ணக்கருவை உறுதிப்படுத்தும் வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த வெள் ளிக்கிழமை மாலை இலங்கை வந்தார்.

அவருக்கு நேற்று முன்தினம் சுதந்திர சதுக்கத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. இதன்போது, ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசின் முக்கியஸ்தர்கள் மற்றும் எதிர்க்கட்சி தலைவர், முன்னாள் ஜனாதிபதிகளையும் சந்தித்தார். அத்துடன், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மலையக தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசினார்.

தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்பில்,

ஐக்கிய இலங்கையில் தமிழ் சமூகத்தின் சமத்துவம், கௌரவம், நீதி நிறைந்த வாழ்க்கைக்கான இந்தியாவின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை இதன்போது மீண்டும் இந்திய பிரதமர் வலியுறுத்தியிருந்தார்.

இதேசமயம், இந்தப் பயணத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கையின் மிக உயரிய விருதான இலங்கை மித்ர விபூஷண விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஒற்றையாட்சிக்குள்...

முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன் னம் பலம் எம்.பி. தெரிவித்தார்.

சந்திப்பு குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"இந்த சந்திப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தியப் பிரதமரிடம் 4 விடயங்களை முன்வைத்தது.

முதலாவது - இலங்கைத் தீவில் இந்தியாவுக்கு மட்டும்தான் அதன் தேசிய பாதுகாப்பு தொடர்பில் ஒரு பார்வை - பங்களிப்பு - உரித்து - இருக்க முடியும் என்பதை நாங்கள் ஏற்று அங்கீகரிக்கின்றோம் என்று குறிப்பிட்டோம்.

வேறு எந்த நாட்டுக்கும் தங்களுடைய தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில் இலங்கையை அணுகும் உரிமையோ, அருகதையோ இல்லை என்பதே எங்கள் நிலைப்பாடு என்பதை வெளிப்படுத்தினோம். இந்தியாவின் தேசிய பாதுகாப்பு என்ற அம்சத்தில் இலங்கைத் தீவு இந்தியாவுக்கு மற்றைய நாடுகளைவிட முன்னுரிமை வழங்கிச் செயல்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டைக் குறிப்பிட்டோம்.

விசேடமாக வடக்கு, கிழக்கில் அந்த உரிமை இந்தியாவுக்கு இருக்கின்றது என்பதை நாங்கள் அங்கீகரிக்கிறோம் என்பதை இந்தச் சந்திப்பில் சொன்னோம்.

இரண்டாவது விடயம் - தமிழர்களின் தேசிய பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஓரளவு நெருக்கமாக வந்த சர்வதேச ஆவணம் இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதையும் குறிப்பிட்டோம். ஆனால், இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் தமிழரின் தேசியப் பிரச்னைக்குத் தீர்வு காண எடுத்த முயற்சியை ஒற்றையாட்சி என்ற நெருக்கடிக்குள் முடக்கியமையால் அது பலன் தரவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினோம்.

1987ஆம் ஆண்டு இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டு, இவ்வளவு காலத்தின் பின்னரும் இன்னமும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துங்கள், நடைமுறைப்படுத்துங்கள் என்று இந்தியா கோர வேண்டிய - வலியுறுத்த வேண்டிய - அவல நிலை நீடிப்பதற்கு இது ஒற்றையாட்சிக்குள் முடக்கப்பட்டமையே காரணம் என்பதை விளக்கினோம்.

இந்த 13ஆம் திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருப்பதால் மத்திய அரசே மேலானது. 13ஆம் திருத்தத்தால் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையில் மோதல் வருவதற்கு இடமில்லை என்று அப்போதே அதை ஒட்டிய ஒரு வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து இருந்தது. ஒற்றையாட்சி முறைமைக்குள் அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசுக்குத்தான் இருப்பதை அது உறுதிப்படுத்தியதை நாங்கள் தெளிவுபடுத்திச் சுட்டிக்காட்டினோம்.

ஆக, எல்லா அதிகாரங்களும் மத்திய அரசிடம் இருப்பதால், அந்த ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களை பகிரவே இடமில்லை என்பதை இந்திய பிரதமருக்குச் சொன்னோம்.

இதுவே 38 வருடங்களாக நாங்கள் கண்ட அனுபவம் என்பதையும் தெரிவித்தோம்.

இதனையே, இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு முதல் தடவையாக வந்து இலங்கை பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது, கூட்டு றவு சமஷ்டியே தீர்வுக்கு வழி என்று குறிப்பிட்டமையை நாங்கள் நினைவுபடுத்தினோம்.

ஒற்றையாட்சிக்கு வெளியே வந்து, சமஷ்டி முறைமைக்கு கீழ் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி, ஒரு தீர்வைக் காண எத்தனித்தால் வழி பிறக்கும் என்பதை நாம் விளக்கினோம்.

இந்த விடயங்களை அடைவதற்காகத் தமிழ்க் கட்சிகளை டில்லிக்கு வரவழைத்துப் பேசுங்கள் என்று நாங்கள் இந்தியப் பிரதமரைக் கோரினோம்.

மூன்றாவதாக - இந்தியாவின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டு, இலங்கையின் வடக்கு, கிழக்கில் இந்தியா அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு நாங்கள் முழுமையாக ஒத்துழைப்போம் என்பதைத் தெரிவித்தோம்.

இந்த அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியாவுக்கு முன்னுரிமை கொடுக்கும் அதே நேரத்தில், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் விதத்தில் வெளித் தரப்புகளுக்கு இப்பிராந்தியத்தில் காலூன்ற இடம் அளிக்கக்கூடாது என்ற எங்களது நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தினோம்.

மீனவர் பிரச்னை பற்றி நான்காவதாகப் பேசினோம். இலங்கையின் வடக்கு - கிழக்கு மீனவர்கள் இன்று வாழ்வா, சாவா நிலைமையில் அவலப்படுகின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினோம். இந்தப் பிரச்னை எந்த வழியிலாவது தீர்க்கப்பட்ட வேண்டும். அது தொடர இடமளிக்கக்கூடாது. இந்த விடயத்தில் வடக்கு - கிழக்கு மீனவ பிரதிநிதிகளும், அரசியல் பிரதிநிதிகளும், இந்தியாவுக்கு சென்று, எங்கள் உறவுகளோடும் மீனவப் பிரதிநிதிகளோடும் பேசித் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தினோம் - என்றார்.

## உயிர்த்த...

ரஞ்சித்தின் இல்லத்துக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

2019 ஈஸ்டர் தாக்குதல்களின் 6ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு சிறப்பு திருப்பலிகள் தேவாலயங்களில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளன. இதே நேரம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட கொழும்பு கொச்சிக்கடை அந்தோனி யார் தேவாலயம், கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயம், மட் டக்களப்பு சீயோன் தேவாலயம் என்ப வற்றுக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறியுள்ளார்.

## புதிய...

வெளியிட முன்பே அமெரிக்க அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது என்றும் அவர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த விடயங்களை தெரிவித்தார்.

பரஸ்பர வரிகள் மூலம் வர்த்தக ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்ய அமெரிக்கா எதிர்பார்த்துள்ள நிலையில் வளர்ந்து வரும் வர்த்தக நிலப்பரப்பை அரசாங்கம் அங்கீகரிப்பதாகக் கூறினார்.

அறிவிப்பு வெளியிடப்பட்டதும் அரசாங்கம் பல முடிவுகளை எடுத்ததாகவும் உள்ளூர் வணிகங்களில் வரி விதிப்பு ஏற்படுத்தும் தாக்கத்துக்கு தீர்வுகளை கண்டறிந்து பாடம் புகட்டும் நோக்கத்துடன் வாஷிங்டனை அணுகியதாகவும் பிரதி அமைச்சர் கூறினார்.

பிரதி அமைச்சர் சூரியப்பெருமவின் கூற்றுப்படி, இரு பிரிவினருக்கும் இடையே மெய்நிகர் முறையில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. மேலும் இந்த விடயத்தில் அவர்களைத் தொடர்பு கொள்ள இலங்கை அரசாங்கம் எடுத்த நடவடிக்கையை டிரம்ப் நிர்வாகம் பாராட்டியது.

இந்தக் கூட்டத்தின் போது, இறக்குமதிகள் மீது இலங்கை விதித்த வரியின் அடிப்படையில் அல்ல, மாறாக ஒரு சூத்திரத்தின் அடிப்படையில் வரிகள் தீர்மானிக்கப்பட்டதாக அமெரிக்கக் குழு ஒப்புக்கொண்டதாக அவர் கூறினார்.

இந்த வாரம் நடைபெறும் சந்திப்பின்போது டிரம்ப் நிர்வாகத்துடன் மேலும் விவரங்கள் மற்றும் பிரத்தியேகங்கள் விவாதிக்கப்படும் என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 44 சதவீத வரி விதித்தமை தெரிந்ததே. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் மோடி தமிழருக்கு செய்துள்ள துரோகம்!

## வைகோ கண்டனம்

சென்னை, ஏப். 07

**இலங்கை இராணுவத்தோடு பிரதமர் நரேந்திர மோடி இராணுவ ஒப்பந்தம் செய்திருப்பது தமிழ் மக்களுக்கு செய்திருக்கும் துரோகம் - இவ்வாறு தமிழகத்தின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.**

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மூன்றுநாள் பயணமாக கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை வந்தார். இதன்போது, பாதுகாப்பு ஒப்பந்தம் உட்பட 7 ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின. இந்த பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாகின. இந்த நிலையில், வைகோ நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கண்டித்தார்.

அத்துடன், இலங்கை இராணுவத்தோடு பிரதமர் நரேந்திர மோடி இராணுவ ஒப்பந்தம் செய்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது. அதுமட்டுமின்றி தமிழ் மக்களுக்கு செய்திருக்கும் துரோகம். தமிழ்



இனத்தை வஞ்சித்திருக்கும் பிரதமர் மோடிக்கு இலங்கையின் உயரிய 'இலங்கை மித்ர விபூஷண' நாமம் வழங்கப்பட்டிருப்பதும் பொருத்தமானது என்றுதான் தமிழ் மக்கள் கருதுவார்கள் - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது!

வவுனியா, ஏப். 07

போதை மாத்திரைகள் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

செட்டிக்குளம் விசேட அதிரடிப்படை முகாமின் அதிகாரிகள் அநுராதபுரம், கவரக்குளம் பகுதியில் சுற்றிவளைப்பிலேயே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், அநுராதபுரத்தை சேர்ந்த சேர்ந்த 35 வயது நபராவார். சந்தேகநபரிடம் இருந்து 350 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கவரக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கப்பலேந்தி மாதாவின் நற்கருணை பவனி!



வடமராட்சி, ஏப். 07

கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயத்தால் நற்கருணை பவனி நேற்று முன்தினம் நடைபெற்றது.

தவக்காலத்தை முன்னிட்டு இந்த நற்கருணை பவனி ஆலய பங்குத்தந்தை அ. அமல்ராஜ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

ஆலயத்தில் இருந்து மக்கள் குடியிருப்புகள் ஊடாக பக்தியுடனான செபமாலை தியானத்துடன் நகர்ந்து மீண்டும் ஆலயத்துக்கு நற்கருணை பவனி அழைத்து வரப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர். (ஐ)

# தேர்தல் சட்ட மீறல்கள் 6 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, ஏப். 07

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பான தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பாக இலங்கை பொலிஸருக்கு ஆறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை இந்த முறைப்பாடுகள் பதிவாகின.

கம்பஹா பேலியகொடை பகுதியிலிருந்து அரச சொத்துகளை தவறாகப் பயன்படுத்துவது தொடர்பாகவும், மற்றொன்று ரகமவிலிருந்து தேர்தல் கட்அவுட்கள் காட்சிப்படுத்தப்படுவது தொடர்பாகவும் ஏப்ரல் 02 ஆம் திகதி இரண்டு முறைப்பாடுகள் பதிவாகின.

ஏப்ரல் 04 ஆம் திகதி, களனியில் இருந்து தேர்தல் கட்அவுட் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடு அளிக்கப்பட்டது.

ஏப்ரல் 05 இல், களனியில் சுகாதார முகாம் நடத்துவது தொடர்பாகவும், மொனராகலையில் வேட்பாளரின் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பது தொடர்பாக ஒரு முறைப்பாடும் வேட்பாளரை ஒத்த படங்களைக் காட்சிப்படுத்தியமை தொடர்பாக மற்றொரு முறைப்பாடும் கிடைத்தன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# வவுனியாவில் போதைப்பொருளை பற்பசைக்குள் கடத்தியோர் கைது!

வவுனியா, ஏப். 07

பற்பசைக்குள் போதைப் பொருளை மறைத்து வவுனியா சிறைச்சாலைக்கு எடுத்துச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆண் ஒருவரும் பெண் ஒருவருமாக இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சிறைச்சாலையில் இருந்த நபர் ஒருவரை பார்வையிட வந்த மன்னாரை சேர்ந்த இருவரே இவ்வாறு சூட்சுமமாக போதைப் பொருளை மறைத்து எடுத்து வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# 6.5 கோடி ரூபாய் பெறுமானமுள்ள போதைப்பொருளுடன் பெண் கைது!

கொழும்பு, ஏப். 07

ஆறரை கோடி ரூபாய் பெறுமானமுள்ள கொக்கைன் போதைப்பொருளுடன் இந்திய பெண் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்தே இந்தப் பெண் கைது செய்யப்பட்டார். கைதானவர் இந்தியாவின் மிசோரம் பகுதியை சேர்ந்த 29 வயதுடையவராவார்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் விமானம் மூலம் இலங்கை வந்த அவரிடமிருந்து, ஒரு கிலோ 644 கிராம் கொக்கைன் போதைப் பொருளை விமான நிலைய பொலிஸார் கைப்பற்றினர். இதன் சந்தை மதிப்பு சுமார் 6 கோடியே 57 இலட்சம் ரூபாய் என்று கருதப்படுகிறது.

இதேநேரம், இந்தப் பெண்ணிடம் போதைப் பொருளை பெறவிருந்த ஒருவரும் கொள்ளுப்பிட்டியில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தவேளை நேற்றைய தினம் கைது செய்யப்பட்டார். கைதானவர் மாலபே பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய தொழிலதிபர் என்று தெரியவந்துள்ளது.

கைதான இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# அரச கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய இருவர் மறியலில்!

யாழ்ப்பாணம், ஏப். 07

அரச கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய் பகுதியில் உள்ள கிராம சேவையாளரின் கடமைக்கு இடையூறு விளைவித்த இருவர் தொடர்பில் கிராம சேவையாளர் கோப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததை அடுத்து, குறித்த இருவரையும் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணைகளின் பின்னர் யாழ் . நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது இருவரையும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ஐ)

# முட்டையின் விலை மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 07

சந்தையில் முட்டையின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது. கடந்த வாரம் 25 ரூபாய் அல்லது அதற்கு குறைவாக முட்டையின் விலை காணப்பட்டது. இந்த நிலையில், தற்போது முட்டை ஒன்றின் விலை 40 ரூபாயாக அதிகரித்துள்ளது.

பண்டிகை காலத்தில் முட்டையின் விலை மேலும் அதிகரிக்கும் என்றும் விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

# தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுசேர வேண்டும்!

## மீனவர் சங்கம் அழைப்பு

வடமராட்சி, ஏப். 07

தொடர்ந்தும் ஏமாற்றும் அரசாங்கங்களை எதிர்கொள்ள அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்று சேரவேண்டும் என்று மீனவர் சங்க பிரதிநிதி நா. வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தற்போது கடலில் சட்டவிரோத தொழிலான ஒளிபாய்ச்சி மீன்பிடி அதிகரித்துள்ளது. இதனை கட்டுப்படுத்த நீரியல் மற்றும் கடற்றொழில் அமைச்சு, கடற்படை நடவடிக்கை எடுப்பதில்லை.

தொடர்ந்தும் ஆட்சியில் மாறிமாறி அமரும் அரசாங்கங்கள் மக்களை ஏமாற்றி வருகின்றன. இதனை எதிர்கொள்ள அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து போராட வேண்டும் - என்றார். (ஐ-05)

# மதுபானம் மூலமாக ரூ. 6,130 கோடி வருமானம்!

கொழும்பு, ஏப். 07

நடப்பு ஆண்டில் கடந்த 3 மாதங்களில் (மார்ச் 31) வரையான காலப்பகுதியில் மதுபானம் மூலமாக 6 ஆயிரத்து 130 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது, 2023ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 117 சதவீத வளர்ச்சியாகும் என்று மதுவரித் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம், 2025ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்பட்டதாகவும் மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org